மாலைமலர் epaper

Mallai malarePaper

**Copyright © 2009 Mallaimalar.**

# தபால் அலுவலகங்களில் ஆம்னி பஸ் டிக்கெட்டுகள்

## சென்னையில் 20 இடங்களில் அறிமுகம்

சென்னை, ஆக. 7–

தபால் அலுவலகங்கள் மூலம் ஆம்னி பஸ் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யும் வசதி அறிமுகப்படுத்தப் படுகிறது.

### எஸ்.ஆர்.எம்

இதற்காக தபால் துறை எஸ்.ஆர்.எம். பஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

வருகிற 11–ந் தேதி (திங்கள்) முதல் இந்த வசதி தமிழகத்தில் 94 தலைமை தபால் அலுவலகங்களில் அறிமுகமாகும். பொது மக்கள் தங்கள் அருகாமை யில் இருக்கும் தபால் நிலையங்களில் நேரில் சென்று டிக்கெட் முன்பதிவு செய்யலாம். சென்னை மண்டலத்தில் அண்ணாசாலை, மைலாப்பூர், தி.நகர் உள்பட 20 தலைமை தபால் நிலையங்களில் இந்த வசதி செய்யப்படுகிறது.

வீட்டில் இருந்தபடியே ஆம்னி பஸ்களில் டிக்கெட் முன்பதிவு செய்ய 'ரெட் பஸ்' என்ற இணைய தளம் உள்ளது. வாடிக்கையாளர்களை கவர இந்த இணைய தளங்கள் முன்பதிவு செய்பவர்களுக்கு பல்வேறு சலுகைகளையும் வழங்கி வருகிறது.

### ஆன்லைன் மூலம்

தற்போது தபால் நிலையங்களும் புக்கிங் ஏஜென்சிகள் போல் சேவையற்ற உள்ளது. வாடிக்கையாளர்களுக்கு ஆன்லைன் மூலம் டிக்கெட்டுகளை பதிவு செய்து வழங்குவார்கள்.

மேலும் பல தனியார் ஆம்னி பஸ் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய பேசி வருவதாக தபால்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

"